இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 14-03-2025

# அது என்ன நாக்பூர் திட்டம்?

"தர்மேந்திர பிரதான் அவர்களே! நாங்கள் மக்களின் எண்ணங்களுக்கு மட்டுமே மதிப்பளித்துச் செயல்படுகிறோம். உங்களைப் போல நாக்பூரின் சொற்களுக்குக் கட்டுப்பட்டு அல்ல" என்று பொட்டில் அடித்தாற் போல் அவர்களுக்குப் புரிவது போலச் சொல்லி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

"நாசகார நாக்பூர் தேசியக் கல்விக் கொள்கையை ஒருபோதும் ஏற்க மாட்டோம்" - என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முழங்கி இருக்கிறார்கள்.

அது என்ன நாக்பூர் திட்டம்?

**பா.ஜ.க.வுக்கு இரண்டு தலைமைகள் இருக்கிறது. ஒன்று பா.ஜ.க. தலைமை. இன்னொன்று ஆர்.எஸ்.எஸ். தலைமை. ஆர்.எஸ்.எஸ். தலைமையை மீறி பா.ஜ.க. தலைமையால் எதுவும் செய்ய முடியாது. ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் பயிற்சி பெற்றவர்கள் தான், பா.ஜ.க.வின் முக்கியப் பொறுப்புகளில் அமர்த்தப்படுவார்கள். இத்தகைய ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலைமையகம் நாக்பூரில் அமைந்திருக்கிறது.**

**சாதிப் பாகுபாட்டை முழுக்க முழுக்க நியாயப்படுத்தும் அமைப்பு இது. சாதிப் பிரிவு என்பதையே 'வர்ண வியாவஸ்தா' என்று சொல்லிக் கொள்வார்கள். 'இது ஒரு சமூக அமைப்பு. சமூக ஏற்றத்தாழ்வல்ல. நான்கு சமூகப் பிரிவுகளும் அவரவர் சக்திக்கேற்ற கடமைகளைச் செய்வதன் மூலமாக கடவுளை வணங்கலாம் என்பதுதான் இதன் தத்துவம். இது ஏற்றத்தாழ்வு அல்ல' என்று சொன்னவர் கோல்வால்கர்.**

சாதி அமைப்பு முறைதான் இந்தியாவைக் காப்பாற்றுவது என்ற கொள்கை கொண்டவர்கள் இவர்கள். 'சாதி அமைப்பு முறையானது சமூகத்தில் ஒற்றுமையைக் காப்பதற்கே உதவி செய்திருக்கிறது' என்று சொன்னவர் கோல்வால்கர்.

சமஸ்கிருதம் தான் ஆட்சிமொழியாக வரவேண்டும் என்பதை வலியுறுத்தும் அமைப்பு இது. அமைப்பின் பெயர் முதல், துணை அமைப்புகள் அனைத்தும் சமஸ்கிருதப் பெயர்களாகத் தான் வைத்திருப்பார்கள். கோல்வால்கர் எழுதுகிறார்; "மொழிப் பிரச்சினைக்கு ஒரே தீர்வுதான் இருக்கிறது; சமஸ்கிருதம் ஆட்சி மொழியாக வருகின்ற காலம் வரை, இந்திக்கே நாம் முன்னுரிமை தந்து, நமது வசதிக்காக ஆட்சி மொழியாக்கிக் கொள்ள வேண்டும்." (As a solution to the problem of 'Lingua franca,' till the time Sanskrit takes that place / we shall have to give priority to Hindi on the score of convenience) என்பதே அவர்களது கொள்கையாகும். 'நாடு முழுவதும் சமஸ்கிருதத்தை கட்டாயப் பாடமாக்க வேண்டும்' என்று ஜனசங்கம் தீர்மானம் போட்டுள்ளது. சமஸ்கிருத வளர்ச்சிக்காக பல்லாயிரம் கோடியை பா.ஜ.க. அரசு கொட்டிக் கொடுப்பதன் பின்னணி இதுதான்.

மாநில அரசுகளை மதிக்காமல் இன்றைய பிரதமர் மோடி நடந்து கொள்கிறார் என்றால், மாநிலங்கள் என பிரிக்கப்பட்டதே தவறு என்பது தான் இவர்களது கொள்கையாகும். 'இந்தியாவில் மாநிலப் பிரிவினையே கூடாது; ஒன்றிய அரசின் நேரடி ஆட்சியின் கீழ் இந்தியா முழுவதும் இருக்க வேண்டும்' என்பது தான் இவர்களின் திட்டம் ஆகும். 1954 ஆம் ஆண்டு மாநிலங்கள் புனரமைப்பு கமிஷன் பரிந்துரைகளைக் கடுமையாக எதிர்த்த கோல்வாக்கர், 'இதனால் நாடே சிதறிப் போய்விடும்' என்றார். "மொழி அடிப்படையில் மாநிலங்களைப் பிரிக்காமல், அதற்குப் பதிலாக, ஒரேஅரசாங்கமே இருக்க வேண்டும்; அதுவே இப்போது அவசியம்" என்றார் (A Unitary Government Prime need of the hour." (ஆதாரம்: டைம்ஸ் ஆப் இந்தியா நாளேடு 26-1- 1956)

1951ஆம் ஆண்டு ஜனசங்க தேர்தல் அறிக்கையிலும், ஆர்.எஸ்.எஸ். வெளியீடான "its Cult" என்ற நூலிலும், 'தனித்தனி மாநிலங்கள் கூடாது' என்ற கருத்து வற்புறுத்தப்பட்டிருக்கிறது!

**'ஜனசங்கம் ஆட்சிக்கு வந்தால், அரசியல் சட்டத்தைத் திருத்தி கூட்டாட்சி முறையை ஒழித்து இந்தியாவை ஒரே நாடு என்று பிரகடனப்படுத்துவோம்.' என்று 1957 ஆம் ஆண்டு பாரதீய ஜனசங்க தேர்தல் அறிக்கை சொல்கிறது.** (இவை அனைத்தையும் பற்றி விரிவாகத் தெரிந்து கொள்ள விடுதலை இராசேந்திரன் எழுதிய ஆர்.எஸ்.எஸ். ஓர் அபாயம், ராவ்சாஹேப் கஸ்பே எழுதிய 'ஆர்.எஸ்.எஸ். ஒரு திரைவிலக்கம் ஆகிய நூல்களைப் பாருங்கள்)

1951ஆம் ஆண்டு ஜனசங்க தேர்தல் அறிக்கையிலும், ஆர்.எஸ்.எஸ். வெளியீடான "its Cult" என்ற நூலிலும், 'தனித்தனி மாநிலங்கள் கூடாது' என்ற கருத்து வற்புறுத்தப்பட்டிருக்கிறது!

**இந்திய வரலாற்றை திருத்தி எழுதுவதற்காக 'பாரதிய இதியாஸ் சங்காலன் யோஜனா' என்ற அமைப்பை உருவாக்கினார்கள். இந்த நாட்டின் பூர்வீக குடிகள் ஆரியர்கள் என்று வரலாற்றை மாற்றினார்கள். தமிழ்நாட்டு ஆளுநர் ஆர்.என்.ரவி இதைத்தான் இப்போது பேசிக் கொண்டிருக்கிறார். நாம் சிந்துச் சமவெளி நாகரிகத்தைப் பேசும் போது, 'சிந்து சரஸ்வதி நாகரிகம்' என்று கதை விடுவது எல்லாம் இவர்கள் தயாரித்த கட்டுக்கதை வரலாறுகள் ஆகும். தமிழ் உள்ளிட்ட திராவிட மொழிகளுக்கு சமஸ்கிருதம் தான் மூலமொழி என்றே ஒரு வரலாற்றை எழுதி வைத்திருக்கிறார்கள்.**

இவை தான் பா.ஜ.க.வின் செயல்பாட்டில் பிரதிபலிக்கும்.

'இந்தியாவுக்கு இனி குருகுலக் கல்விதான் தேவை, சமஸ்கிருதத்தை கட்டாயமாக்க வேண்டும்' என்று கடந்த பிப்ரவரி 12 ஆம் தேதியன்று ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் பொதுச்செயலாளர் சுரேஷ் ஜோஷி சொல்லி பேசி இருக்கிறார். 'கல்வி விஷயத்தில் மக்களின் உணர்வுகளைப் புறந்தள்ள வேண்டும். ஆங்கிலேயரின் கல்வி முறையை இந்தியா தழுவி இருக்கக் கூடாது. நாட்டு நலனுக்கு அக்கறை செலுத்தும் வகையில் குருகுலக் கல்வி முறைக்கு மாற வேண்டும். சமஸ்கிருதமே அனைத்து மொழிகளுக்கும் தாய். இந்தியாவைப் புரிந்து கொள்ள சமஸ்கிருதமே தேவை. அதனைக் கட்டாயமாக்க வேண்டும்" என்று கோவா மாநிலம் டோனாபவுலாவில் நடந்த நிகழ்ச்சியில் சுரேஷ் ஜோஷி பேசி இருக்கிறார். இதுதான் நாக்பூரின் திட்டம்.

**அனைவரும் படிக்கக் கூடாது, படித்துவிடக் கூடாது என்பதுதான் இதற்குள் இருக்கும் நாசகாரச் சிந்தனை ஆகும். சிலரை மட்டும் படிக்க வைக்கவும், சிலரை அவர்களுக்கு சேவை செய்ய வைக்கவுமான சதிச் செயல்தான் இதற்குள் இருக்கிறது. இந்தி படிக்கலாமா, வேண்டாமா என்று இன்று விவாதங்கள் நடக்கிறது. 'இந்தியர்கள் அனைவரும் படிக்கலாமா? கூடாதா?' என்பதும் இதற்குள் நடக்கும் விவாதம் ஆகும். அதனால் தான் இதனை நாசகாரத் திட்டம் என்கிறோம்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (12.3.2025) அவரது இல்லத்தில், ஈரோடு மாவட்டக் கழகப் பிரதிநிதி பி. சாமிக்கண்ணன், அண்மையில் திருமணம் நடைபெற்ற தனது மகன் சா.சந்துரு – ம.தேவிகா ஆகிய புதுமணத் தம்பதியருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன், ஈரோடு மத்திய மாவட்டப் பொறுப்பாளர் தோப்பு வெங்கடாசலம் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.3.2025) அவரது இல்லத்தில், சென்னை தெற்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் எஸ். குணசேகரன் மகள் கு.அனுஷியா – ரெ.தினேஷ்பாபு ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். உடன் அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் க.கணபதி, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு. மகேஷ்குமார் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் – பல்வேறு திட்டங்களால்

# மக்களிடம் 'அப்பா' என்ற அன்பைப் பெற்றுள்ளார்!



## 'ஈ நாடு' தெலுங்கு பத்திரிகை புகழாரம்!




**ஹைதராபாத், மார்ச் 14-**

**"முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பல்வேறு திட்டங்களால் அவரை தமிழ்நாடு மக்கள் 'அப்பா' என்று அன்புடன் அழைக்கின்றனர்" என்று 'ஈ நாடு' தெலுங்கு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.**

**இது குறித்து 'ஈ நாடு' பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தி வருமாறு:**

இந்திய அரசியலில் தமிழ்நாடு அரசியல் வேறுபட்டது. கடந்த 50 ஆண்டுகளாக திராவிடக் கட்சிகள் தமிழ்நாட்டை ஆண்டுகொண்டு இருக்கிறார்கள். 1967க்குப் பிறகு தேசிய கட்சிகள் எதனாலும் தமிழ்நாட்டை ஆளமுடியவில்லை. தமிழ்நாட்டின் ஆளுமைகளை யாரும் பொதுவாக அரசியலில், அரசியல் மேடைகளில் பெயர் அழைக்கும் வழக்கம் இல்லை. அதற்கு பதிலாக அவர்களுக்கே உரிய அங்கீகாரம் பெற்ற பெயர்களை வைத்து மரியாதையுடன் அழைக்கும் வழக்கம் ஏற்பட்டது. உதாரணத்திற்கு தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, எம்.ஜி.ஆர்., கலைஞர் போன்று மரியாதைக்குரிய பெயர்களை வைத்து அழைப்பது வழக்கம்.

அ.தி.மு.க.வின் பொதுச்செயலாளர் முன்னாள் முதலமைச்சராக இருந்த மறைந்த ஜெயலலிதா அவர்களை புரட்சித்தலைவி அம்மா என்று அந்த கட்சியின் தொண்டர்கள் அனைவரும் அழைத்தனர்.

**அரசியலில் தளபதி**

தி.மு.க. தொண்டர்களின் தளபதியாக இருந்த திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தற்போது 'அப்பா' என்று அழைக்கும் அளவிற்கு மக்களிடம் சென்று அடைந்திருக்கிறார். கடந்த 4 ஆண்டுகளாக ஆட்சியில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு என்று பல பிரத்யேகமான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி உள்ளார். இதனால் மாணவர்கள் முதலமைச்சர் அவர்களை பாசத்துடன் 'அப்பா' என்று அழைக்கின்றனர். உதாரணத்திற்கு மாணவர்களுக்கான திட்டங்கள் காலைஉணவுத்திட்டம், நான் முதல்வன், புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் போன்ற திட்டங்கள் மாணவர்களை பயன்பெற வைத்துள்ளது.

இத்தகைய திட்டங்கள் மூலம் மாணவர்களிடம் அன்பை பெற்ற முதலமைச்சர் ஸ்டாலின் அப்பா என்று அன்புடன் அழைக்கப்படுகிறார். அவர் 'அப்பா' என்ற அழைப்பை அன்புடன் ஏற்றுக்கொண்டதாகத் தெரியவருகிறது.

இவ்வாறு செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

### எஸ்.சி. – எஸ்.டி. – ஓபிசி மாணவர்களின்

# கல்வி உதவித் தொகைக்கான வருமான உச்சவரம்பை அதிகரிக்க வேண்டும்!

## மக்களவையில் – நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவசர கோரிக்கை!



*புதுடெல்லி, மார்ச் 14-*

*பொது அவசரம் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்களை மக்களவையில் விதி எண் 377 இன் அடிப்படையில் உறுப்பினர்கள் எழுப்ப முடியும். அந்த வகையில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் மார்ச் 12 ஆம் தேதியன்று எஸ்.சி.,எஸ்,டி, ஓபிசி மாணவர்களுக்கான முக்கிய பிரச்சினையை மக்களவையில் எழுப்பினார்.*

*அப்போது அவர், "பட்டியல் சமூக (SC), பழங்குடி (ST) மற்றும் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பு (OBC) மாணவர்களுக்கான கல்வி வாய்ப்புகளில் உள்ள ஏற்றத் தாழ்வை நிவர்த்தி செய்ய வேண்டிய அவசரத் தேவையை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.*

*தற்போது, இந்த மாணவர்களுக்கான மெட்ரிக்-கிற்கு முந்தைய மற்றும் பிந்தைய உதவித் தொகை பெறுவதற்கான ஆண்டு குடும்ப வருமான உச்சவரம்பு 2.5 லட்சம் ரூபாயாக உள்ளது.*

*அதேநேரம் பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவு மாணவர்களுக்கான (EWS) தேசிய ஓவர்சீஸ் ஸ்காலர்ஷிப், மற்றும் உயர்தர கல்வித் திட்டம் போன்ற ஸ்காலர்ஷிப் திட்டங்களுக்கு வருமான உச்சவரம்பு 8 லட்சமாக திருத்தியமைக்கப்பட்டுள்ளது.*

*2020-21 ஆம் ஆண்டுக்கான அகில இந்திய உயர் கல்வி கணக்கெடுப்பின் (AISHE)படி, பட்டியல் சமூக மாணவர்களின் மொத்த சேர்க்கை விகிதம் 23.1% ஆகவும், பழங்குடி மாணவர்களின் மொத்த சேர்க்கை விகிதம் 18.9% ஆகவும் உள்ளது. இது தேசிய சராசரியான 27.3% என்பதை விட மிகவும் குறைவு.*

*இவ்வாறான வேறுபாடுகள், பின்தங்கிய வகுப்பை சேர்ந்த மாணவர்களுக்கு, உயர் கல்வியில் சமமான வாய்ப்புகளை உறுதி செய்வதற்கான தலையீடுகளின் அவசியத்தை எடுத்துக்காட்டுகிறது.*

*தமிழ்நாடு அரசு கடந்த டிசம்பர் 2024 இல் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில்... ஒன்றிய அரசு SC, ST மற்றும் OBC மாணவர்களுக்கான ப்ரீ-மெட்ரிக் மற்றும் போஸ்ட்-மெட்ரிக் உதவித் தொகைகளுக்கான வருமான உச்சவரம்பை EWS மாணவர்களைப் போலவே 8 லட்சமாக உயர்த்தவும், விளிம்புநிலை சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான கல்விச் சேர்க்கையை எளிதாக்கவும் வலியுறுத்தியது.*

*தமிழ்நாடு அரசின் இந்த முன்மொழிவின் மீது ஒன்றிய அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு கனிமொழி கருணாநிதி அவர்கள் வலியுறுத்தி பேசினார்.*



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக பர்கூரில் "தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்" ஒன்றிய அரசை கண்டித்து பாராளுமன்றத் தொகுதி மறு சீரமைப்பு என்ற பெயரில் தமிழ்நாட்டு அரசியல் பிரதிநிதித்துவத்தை குறைக்கும் ஒன்றிய அரசின் செயலைக் கண்டித்து நடைபெற்ற மாபெரும் கண்டன பொதுக்கூட்டத்தில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரையாற்றினார். கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. உள்ளிட்ட ஏராளமான கழகத்தினர் கலந்து கொண்டனர்.